| தேசியக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வெளியிட்ட வரைவுக் கற்றல் விளைவுகள் | | |
|---|---|---|
| **வ. எண்** | **ஒன்பதாம் வகுப்பு** | **பத்தாம் வகுப்பு** |
| 1 | சமூகம் சார்ந்த பிரச்சினைகளான பாலினம், சாதி ,மதம், உள்ளிட்ட பல்வேறு வகையான பாகுபாடு பற்றிய நிகழ்வுகளைக் கேட்டல் மற்றும் அவை குறித்தத் தங்களின் கருத்துகளை வெளிப்படுத்துதல். | சுற்றுப்புறச் சூழ்நிலைகள் குறித்தத் தங்களது கருத்துகளைச் சுதந்திரமான முறையில் வெளிப்படுத்துதல். |
| 2 | உள்ளூர் மக்களின் தேவைகளைப் பட்டியலிடுதல்; அவை குறித்து எழுதுதல். | சுற்றுப்புறங்களில் உள்ள மனிதர்கள், பறவைகள், விலங்குகளின் தேவைகளைத் தங்கள் சொந்த நடையில் எடுத்துரைத்தல் / வெளிப்படுத்துதல். |
| 3 | பள்ளிக்கு வெளியே / பாட நூலுக்கு அப்பால் புதிய படைப்புகளைத் தேடி ஆர்வமுடன் படித்தல். | உள்ளூர் / சமூகம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக உரிய அலுவலர்களுக்குக் கடிதம் எழுதுதல். |
| 4 | விருப்பமான புத்தகங்களை நூலகங்களில் தேடிப்படித்தல். | சிறப்பு இயல்பு குழந்தைகளின் (வாய் பேச இயலாதோர்) சைகை மொழிகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப தங்களின் மொழியில் பதிலை வெளிப்படுத்துதல். |
| 5 | நாளிதழ்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் காணப்படுகின்ற நிகழ்வுகளான விளையாட்டு, திரைப்படம், இலக்கிய மதிப்புரைகள், அறிக்கைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல். | புதிய கவிதைகளைப் படித்து நண்பர்களுடன் கலந்துரையாடுதல் மற்றும் விவாதித்தல். |
| 6 | தாங்கள் பார்த்த, கேட்ட, படித்த | வானொலி அல்லது |

| | | |
|---|---|---|
| | நிகழ்வுகள் குறித்து சிந்தித்து விளக்கம் கேட்டல். | செய்தித்தாள்களில் வெளியான புத்தக மதிப்புரை குறித்து கருத்துகளை வெளிப்படுத்துதல் மற்றும் தாங்களே புத்தக மதிப்புரை எழுதுதல். |
| 7 | பிறரின் கருத்துகளைப் புரிந்துகொண்டு, தம்முடைய கருத்துகளை வெளிப்படுத்துதல். | தங்களது சொந்த அனுபவங்களையும் கற்பனைகளையும் எழுத்து வடிவமாக மாற்றுதல். |
| 8 | பிறரின் அனுபவங்கள், உணர்வுகள் மற்றும் கருத்துகளை சொந்த நடையில் எழுதுதல். | தங்களுடைய நடையில் கதை, கவிதைகளைப் புனைதல். |
| 9 | தாங்கள் கேட்ட, படித்த கதை மற்றும் கவிதைகளைத் தங்களின் நடையில் எழுதுதல். | சுற்றுப்புறத்தில் உள்ள பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து உரிய அலுவலர்களுக்குக் கடிதம் எழுதுதல். |
| 10 | சமூகப் பிரச்சினைகளைக் களைவதற்கான கடிதம் எழுதப்பழகுதல். | அன்றாட வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளில், தம் சொந்த கற்பனையைப் புகுத்தி கவித்துவத்துடன் எழுதுதல். |
| 11 | அ) சந்தப்பாடல்கள் மற்றும் கவிதைகளை இசையோடு பாடுதல்.<br>ஆ)துணைப்பாடப் பகுதிகளைப் படித்து அவற்றின் மையக்கருத்தைச் சுருக்கி / விரித்து தம் நடையில் எழுதுதல். | படித்த கவிதைகள், கதைகள் குறித்து விமரிசனங்கள் எழுதுதல், பேசுதல் மற்றும் கலந்துரையாடுதல். |
| 12 | திரைப்படங்கள் மற்றும் விளம்பரங்களைக் காணும்போது, தாம் கற்ற மொழித்திறன்களை அவற்றோடு பொருத்திப்பார்த்தல். | கதைகள், கவிதைகளில் உள்ள மொழியின் நுணுக்கங்களை அறிந்து பயன்படுத்துதல் மற்றும் கலந்துரையாடுதல். |
| 13 | சொல், சொற்றொடர் அமைப்பு, எழுத்துநடை, பத்தி அமைப்பு போன்றவற்றில் இடம்பெற்றுள்ள மொழியின் நுணுக்கங்களை அறிந்து | வெவ்வேறு இலக்கிய வகைகளைப் புரிந்துகொண்டு அவற்றைப் பகுப்பாய்வு செய்தல். |

| | | |
|---|---|---|
| | வெளிப்படுத்துதல். | |
| 14 | சமூகத்தில் நடைபெறும் மாற்றங்களை அறிந்து எழுத்தில் வெளிப்படுத்துதல். | பல்வேறு வகையான இலக்கியங்களைப் படித்து அவற்றின் நுட்பங்களைத் தெரிந்துகொள்ளுதல். |
| 15 | தம்முடைய தோழர்களின் பேச்சுமொழி, அவர்களின் உணர்வு மற்றும் பயன்படுத்தும் பொருள்கள் போன்றவற்றை உற்றுநோக்கி அவை குறித்து கலந்துரையாடுதல். | இயற்கை மற்றும் சமூகம் குறித்து பேசுதல் மற்றும் எழுதுதல். |
| 16 | வேளாண்மை, கைவினைப் பொருள்கள், கட்டடக்கலை ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படும் தமிழ்ச்சொற்களுக்கு இணையான கலைச்சொற்களைக் கண்டறிதல். | ஊடக மொழிகளின் வேறுபாட்டை அறிந்து அதுகுறித்து கலந்துரையாடுதல் மற்றும் எழுதுதல். |
| 17 | சமுதாயத்தில் காணப்படும் சாதி, மதம், பாலினப்பாகுபாடு, பழக்கவழக்கங்கள் குறித்து விவாதித்தல். | விமான நிலையம், இரயில் நிலையம், பேருந்து நிலையம் போன்ற இடங்களில் காணப்படும் அறிவிப்புகள், பெயர்ப் பலகைகளை உற்றுநோக்கி அதன்மீதான தங்களின் கருத்துகளை எடுத்துரைத்தல். |
| 18 | சமுதாயத்தில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து மற்றவர்களுடன் தர்க்கரீதியிலான விவாதம் செய்தல். | சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்தத் தங்களின் படைப்புகளை வெளிஉலகிற்கு வெளிப்படுத்துதல் மற்றும் காட்சிப்படுத்துதல். |
| 19 | தங்களுடைய தாய்மொழியின் சிறப்புக்கூறுகளைப் பிற மொழிகளுடன் ஒப்பிட்டு அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளைப் பட்டியலிடுதல். | வேளாண்மை, கைவினைப் பொருள்கள், கட்டடக்கலை ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படும் தமிழ்ச்சொற்களுக்கு இணையான கலைச்சொற்களைக் கண்டறிதல். |